# மத்திய அரசின் கொள்கை மகளிரின் முன்னேற்றம்

**புது தில்லி, செப். 26:** மகளிர் முன்னேற்றத்துக்கு புதிய வாயில்களைத் திறப்பதே மத்திய பாஜக அரசின் கொள்கை என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மேலும், புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு மசோதா, நாட்டின் புதிய எதிர்காலத்தை பறைசாற்றுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், பொதுத் துறை வங்கிகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளில் ஒன்றரை ஆண்டில் 10 லட்சம் பேருக்கு வேலை வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு அக்டோபரில் தொடங்கப்பட்டது.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி), ரயில்வே தேர்வு வாரியம், அரசுப் பணியாளர் தேர்வாணையம் (எஸ்எஸ்சி) உள்ளிட்டவற்றின் மூலம் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.



**51,000 பேருக்கு நியமன ஆணைகள்:** புதிதாக தேர்வுசெய்யப்படுவோருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் முகாம்கள் (ரோஜ்கர் மேளா) பலகட்டங்களாக நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, நாடு முழுவதும் பல்வேறு அரசுத் துறைகளில் தேர்வான 51,000 பேருக்கு பிரதமர் மோடி செவ்வாய்க்கிழமை காணொலி வாயிலாக பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அவர் பேசியதாவது:

தற்போதைய காலகட்டம், நாட்டின் வரலாற்று முடிவுகள் மற்றும் சாதனைகளுக்கான நேரமாகும். நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு மசோதா, நாட்டின் மக்கள்தொகையில் பாதி அளவு உள்ள மகளிருக்கு மிகப் பெரிய உத்வேகத்தை அளிக்கும். கடந்த 30 ஆண்டுகளாக கிடப்பில் இருந்த இந்த மசோதா, இரு அவைகளிலும் சாதனை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது. தேசத்தின் புதிய எதிர்காலத்தை பறைசாற்றுவதாக மகளிர் இடஒதுக்கீடு மசோதா திகழ்கிறது.

**நேர்மறை மாற்றங்கள்:** புதிய இந்தியாவின் கனவுகள் மிகப் பெரியது. விண்வெளி முதல் விளையாட்டு வரை ஒவ்வொரு துறையிலும் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். அதேபோல், ஆயுதப் படைகளிலும் அவர்கள் இணைக்கப்பட்டு வருகின்றனர்.

பெண்களின் பங்கேற்பு இருந்தால், எந்தவொரு துறையிலும் நேர்மறையான மாற்றங்களுக்கு அது வழிவகுக்கும். பெண்கள் முன்னேற்றத்துக்கு புதிய வாயில்களைத் திறப்பதே மத்திய அரசின் கொள்கை.

**தொழில்நுட்பங்களால் ஊழல் தடுப்பு:** தொழில்நுட்பங்களின் பயன்பாட்டால் அரசுத் திட்டங்களில் ஊழல் தடுக்கப்பட்டுள்ளது; சிக்கல்கள் குறைந்து, நம்பகத்தன்மை மற்றும் சுமுக செயல்பாடு மேம்பட்டுள்ளது. நேரடி பலன் பரிமாற்றம், ரயில் டிக்கெட் முன்பதிவு, டிஜிலாக்கர், மின்னணு முறையில் வாடிக்கையாளர் விவரங்களை அறிதல் (இகேஒய்சி) எனப் பல்வேறு திட்டங்களில் தொழில்நுட்பம் முக்கியப் பங்காற்றுகிறது.

தற்போது புதிதாக பணி நியமனம் பெற்றிருப்பவர்கள், 'குடிமக்களே முதன்மையானவர்கள்' என்ற நோக்கத்துடன் பணியாற்ற வேண்டும். அரசு நிர்வாகத்தை மேம்படுத்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும்.

## வளர்ந்த இந்தியா: பிரதமர் வலியுறுத்தல்

'2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக்க உறுதியேற்றுச் செயல்பட வேண்டும்' என்று அரசு ஊழியர்களுக்கு பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இது தொடர்பாக, நிகழ்ச்சியில் பேசிய அவர், 'நாட்டின் நவீன உள்கட்டமைப்பில் முன்னெப்போதும் இல்லாத வகையில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, இயற்கை விவசாயம், பாதுகாப்பு, சுற்றுலா போன்ற துறைகள் புதிய உத்வேகம் கண்டுள்ளன.

கைப்பேசிகள் முதல் விமானந்தாங்கி கப்பல்கள் வரை, கரோனா தடுப்பூசி முதல் போர் விமானங்கள் வரை பல்வேறு துறைகளில் 'தற்சார்பு இந்தியா' இயக்கம் பலனளித்து வருகிறது. அடுத்த சில ஆண்டுகளில் உலக அளவில் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும். அதற்கான செயல்முறையில் அரசு ஊழியர்கள் ஏராளம் பங்களிக்க வேண்டியுள்ளது' என்றார் பிரதமர்.

**புதிய சிந்தனையுடன் பணி:** மகத்தான இலக்குகளை எட்டும் நோக்கத்துடன், தொடர்ச்சியான கண்காணிப்பு, தீவிர அமலாக்க நடைமுறை, பொதுமக்களின் பங்கேற்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட புதிய மனநிலையுடன் மத்திய அரசு செயலாற்றுகிறது. 'பிரகதி' தளத்தின் மூலம் நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன என்றார் பிரதமர் மோடி.

இந்த முகாமையொட்டி, நாடு முழுவதும் 46 இடங்களில் பணி நியமன ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# பழம்பெரும் நடிகை வஹீதா ரஹ்மானுக்கு தாதா சாகேப் பால்கே விருது

**புது தில்லி, செப். 26:** பழம்பெரும் நடிகை வஹீதா ரஹ்மானுக்கு இந்திய திரைத்துறையின் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருது செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது.



தெலுங்கு திரைப் படமான 'ரோஜாலு மராயி' மூலம் கடந்த 1955-ஆம் ஆண்டு திரையுலகுக்கு அறிமுகமான நடிகையும், நடனக் கலைஞருமான வஹீதா ரஹ்மான் (85), 'பியாசா', 'சிஐடி', 'கைடு', 'காகஸ் கே ஃபூல்', 'காமோஷி', 'திரிசூல்' உள்ளிட்ட பல்வேறு வெற்றிப் படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர்.

எம்ஜிஆர் நடிப்பில் உருவான 'அலிபாபவும் 40 திருடர்களும்' படத்தில் 'சலாம் பாபு சலாம் பாபு' என்ற பாடலில் நடனமாடி தமிழ் திரையுலக ரசிகர்களுக்கு அறிமுகமான வஹீதா ரஹ்மான், கமல் நடித்த 'விஸ்வரூபம்-2' மூலம் தமிழ் படத்தில் மீண்டும் நடித்தார்.

60 ஆண்டுகளுக்கும் மேலாக 90-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள வஹீதா சிறந்த நடிகைக்கான தேசிய விருதை இரு முறையும், பிலிம்ஃபேர் உள்பட பல்வேறு திரைப்பட விருதுகளையும் பெற்றவர். மேலும், இவருக்கு பத்மஸ்ரீ, பத்ம பூஷண் விருதுகளை வழங்கி மத்திய அரசு கௌரவித்தது.

சென்னை செங்கல்பட்டில் பிறந்தவரான நடிகை வஹீதா ரஹ்மான், தற்போது பெங்களூரில் வசித்து வருகிறார். இந்நிலையில், நடிகை வஹீதா ரஹ்மானுக்கு இந்திய திரைப் படத் துறையின் உயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கி கௌரவிக்கப்படுவதாக மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் செவ்வாய்க்கிழமை அறிவித்தார்.

**பிரதமர் வாழ்த்து:** நடிகை வஹீதா ரஹ்மானுக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'நடிகை வஹீதா ரஹ்மானுக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டதில் மிகுந்த மகிழ்ச்சி. இந்திய திரைத்துறையில் அவரது பயணம் அழியாத முத்திரையைப் பதித்துள்ளது.

திறமை, அர்ப்பணிப்பு மற்றும் கருணையின் அடையாளமாக அவர், நமது திரைத்துறை சிறந்த பாரம்பரியத்தை உணர்த்துகிறார். அவருக்கு எனது வாழ்த்துகள்' என்று குறிப்பிட்டிருந்தார்.

EVA STALIN IAS ACADEMY

# தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை: முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்

**சென்னை, செப். 26:** தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கென தனிக் கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிட்டார். சுற்றுலாத் திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூ.1.50 கோடி வரை மூலதன மானியம் அளிக்கப்படும் என்று அந்தக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டது.

சுற்றுலாக்கொள்கையில் இடம்பெற்றுள்ள குறிப்பிடத்தக்க அம்சங்கள்:

தொழில் துறைக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் போது, எத்தகைய முக்கியத்துவம் அளிக்கப்படுமோ அதற்கு இணையான முக்கியத்துவத்தை சுற்றுலாத் துறை திட்டங்களுக்கு அளிக்க கொள்கையில் வகை செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையில் ஈடுபட்டு வரும் பல்வேறு நிலையிலான பங்குதாரர்களின் நீண்டகால கோரிக்கையை சுற்றுலா கொள்கை பூர்த்தி செய்கிறது. மேலும், சாகசம், பொழுதுபோக்கு, கேரவன், கிராமப்புற மற்றும் தோட்டம், கடலோரம், கலாசாரம், மருத்துவம், ஆரோக்கியம், ஆன்மிகம், சுற்றுச்சூழல் ஆகியவற்றை மையப்படுத்திய சுற்றுலாக்களை மேம்படுத்துவது சுற்றுலா கொள்கையின் நோக்கங்களில் ஒன்றாக உள்ளது.

**ஒற்றைச்சாளர அனுமதி:** அனைத்து தகுதியான சுற்றுலா திட்டங்களுக்கும் ஒற்றைச் சாளர அனுமதியுடன் கூடிய ஒப்புதல் அளிக்கப்படும். தனியார் முதலீட்டை ஊக்குவிக்க சுற்றுலா கொள்கையில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

பொழுதுபோக்கு பூங்காக்கள், பாரம்பரிய ஓட்டல்கள், அனுபவமிக்க ஓய்வு விடுதிகள், சுற்றுச்சூழல்-குடிசைகள், ஆரோக்கிய ஓய்வு விடுதிகள், மீன்வளம், பண்ணை சுற்றுலா திட்டங்கள், அருங்காட்சியகங்கள், சாகச சுற்றுலா திட்டம் போன்ற பல்வேறு சுற்றுலாத் திட்டங்களை மேம்படுத்த கொள்கையில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, சுற்றுலாத் திட்டங்களுக்கு அளிக்கப்படும் முதலீடுகளைக் கருத்தில் கொண்டு மானியமும் வழங்கப்படவுள்ளது. ரூ.50 கோடி வரையிலான முதலீட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூ.1.50 கோடி வரை மூலதன மானியம் அளிக்கப்படும்.

பெண்கள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகளால் ஊக்குவிக்கப்படும் திட்டங்களுக்கும், குறு நிறுவனங்களுக்கும், நிறுவனங்களின் விரிவாக்கத்துக்கும் அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை கூடுதல் மூலதன மானியம் அளிக்கப்படும்.

ரூ.50 கோடி முதல் ரூ.200 கோடி வரையில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூ.3 கோடி வரை மூலதன மானியம் அளிக்கப்படும். ரூ.200 கோடிக்கும் அதிகமான முதலீட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களாக இருந்தால், அந்தத் திட்டங்களின் அடிப்படையில் கட்டமைப்பு ஊக்கத் தொகை அளிக்கப்படும்.

முக்கிய சுற்றுலாத் தலங்களில் புதிய விடுதிகளுக்கு வணிக மின் கட்டணம் மற்றும் நிறுவன மின் கட்டண வித்தியாசத் தொகை முதலீட்டுத் தொகையில் 10 சதவீதம் வரை திரும்ப அளிக்கப்படும். 3 ஆண்டுகளுக்கு இந்தச் சலுகை தொடரும் என்று சுற்றுலாத் துறைக்கான தனித்த கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச்செயலகத்தில்நடைபெற்ற நிகழ்வில், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் க.மணிவாசகன், சுற்றுலாத் துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**முதலீடுகளை ஊக்குவிக்க பல கோடி ரூபாய் மானியம்**



'தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023'-ஐ சென்னை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் வெளியிட்ட முதல்வர் மு.க ஸ்டாலின். உடன் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர்.

# காசமில்லா சுவாசம்!

உலகின் மக்கள்தொகையில் கால் பங்கு பேர் காச நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக 2022 உலக சுகாதார நிறுவன அறிக்கை தெரிவிக்கிறது. இந்தியாவிலிருந்து 2025–ஆம் ஆண்டுக்குள் முழுமையாக காச நோயை அகற்றுவது என்பது மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் இலக்கு. உலகளாவிய அளவில் ஐ.நா. சபை 2030–ஐ இலக்காக நிர்ணயித்திருக்கிறது.

சுகாதாரத் துறையின் 149–ஆவது நாடாளுமன்ற நிலைக்குழு அறிக்கை, காச நோய் ஒழிப்புத் திட்டத்தை தனியார் துணையை நாடாமல் அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பரிந்துரைத்திருக்கிறது. காச நோய் ஒழிப்பு முயற்சியில் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முழுமையான கண்காணிப்பும், முன்னேற்றம் குறித்த தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் நிலைக்குழு பரிந்துரைத்திருக்கிறது.

அரசின் காச நோய் கட்டுப்பாட்டு முயற்சிக்கான 'நிக்ஷய் மித்ர' திட்டத்தின் மூலம் 58 சமூகப் பொருளாதார பாதிப்புகள் அகற்றப்படுகின்றன. அது மட்டுமே போதாது என்றும், பிரதமரின் 'காச நோய் அகன்ற பாரதம்' திட்டம் மேலும் முனைப்புடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கிறது நிலைக்குழு அறிக்கை.

'தனியார் அமைப்புகளுக்கு தங்களது பொறுப்புகளை வழங்குவதன் மூலம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அரசுத் துறையின் கவனம் குறைந்திருக்கிறது' என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. கடந்த ஆண்டு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவால் தொடங்கி வைக்கப்பட்ட 'நிக்ஷய் மித்ர' திட்டத்தின் கீழ், தனி நபர்களாலோ, அமைப்புகளாலோ, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாலோ, நிறுவனங்களாலோ காச நோயாளிகள் தத்தெடுக்கப்பட்டு அவர்களது மருத்துவச் செலவும், நலனும் பேணப்பட வழிகோலப்பட்டது. அதன் விளைவாக அரசுத் துறைகள் தங்களது பொறுப்பை தட்டிக்கழிக்க முற்படுகின்றன என்பதுதான் நிலைக்குழு முன்வைக்கும் குற்றச்சாட்டு.

கடந்த ஐந்து ஆண்டுகளில் காச நோய்ப் பரவல் ஓரளவுக்கு கட்டுப்பட்டிருக்கிறது என்றாலும்கூட, அதன் தாக்கம் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர் மீதும் காணப்படுகிறது. 15 முதல் 24, 25 முதல் 34 வயதுப் பிரிவினர் மத்தியில் சமீப காலமாக காச நோய் பாதிப்பு அதிகரித்து வருவது தெரியவந்திருக்கிறது. மக்கள்தொகையில் உழைக்கும் பிரிவினர் (18 முதல் 50 வயதினர்) ஆரோக்கியமாக இருப்பது அவசியம் என்பதால், இதை அசட்டையாக விட்டுவிடக் கூடாது என்கிறது அறிக்கை.

2022 ஆய்வின்படி, இந்தியாவில் 44% மக்கள்தொகையினர் தேவையான ஊட்டச்சத்து இல்லாததால் குறைவான ஆரோக்கியத்துடன் காணப்படுகிறார்கள். அதனால்தானோ என்னவோ, ஆண்டுதோறும் 12 லட்சத்துக்கும் அதிகமானோர் காச நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

2022 செப்டம்பரில் 'நிக்ஷய் மித்ர' என்கிற காச நோயாளிகளின் ஒப்புதலுடன் ஊட்டச்சத்து வழங்கும் இன்னொரு திட்டம் அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் காச நோய் மரணங்களை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசும் ஒரு திட்டத்தை அறிவித்தது. தமிழகத்தில் உள்ள காச நோயாளிகளில் 52% ஊட்டச்சத்து குறைவானவர்களாகவும், 25% கடுமையான ஊட்டச்சத்து குறைவானவர்களாகவும் காணப்பட்டனர். தமிழகத்திலேயே நிலைமை இப்படி என்றால், ஏனைய மாநிலங்களின் நிலைமை என்ன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

2018–இல் தொடங்கப்பட்ட 'நிக்ஷய் போஷண் யோஜனா' என்கிற ஊட்டச்சத்து வழங்கும் திட்டம், காச நோயாளிகளுக்கு நேரடி மானியம் வழங்க உருவாக்கப்பட்டது. அதன்படி, நோயாளிகளின் சிகிச்சைக் காலத்தில் அவர்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவு வழங்குவதற்காக மாதம் ரூ.500 நேரடி மானியமாக வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மாத மானியமான ரூ.500, போதுமான ஊட்டச்சத்து பெறுவதற்கு போதாது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இந்திய காச நோய் அறிக்கை 2023–இன்படி, பதிவாகி இருக்கும் 24 லட்சம் காச நோயாளிகளில் 16 லட்சம் பேர் (66%) மட்டுமே 'நிக்ஷய் போஷண் யோஜனா' திட்டத்தின் கீழ் ஒரு மாத மானியம் பெற்றிருக்கின்றனர். பலருக்கும் மானியம் வழங்கப்படவில்லை. அது மட்டுமல்ல, கடந்த மூன்று ஆண்டுகளில் நோயாளிகளின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கவில்லை என்பதிலிருந்து முறையான கண்காணிப்போ, கணக்கெடுப்போ இல்லை என்பது தெளிவாகிறது.

காச நோயின் மிக முக்கியமான காரணம், ஊட்டச்சத்து குறைவு என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் கடந்த நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி காரணமாக காச நோயாளிகளின் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்துவிட்டது என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதனால், ஊட்டச்சத்துள்ள உணவு வழங்கப்படுவதன் மூலம் இந்தியாவில் 70% நோயாளிகள் குணமடைய ஏதுவாகும். அரசு புள்ளிவிவரத்தின்படி, 2020–இல் 4.5 லட்சத்துக்கும் அதிகமானோர் இந்தியாவில் காச நோய்க்கு பலியாகி இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அரைகுறை மனதுடன் காச நோய் ஒழிப்புத் திட்டம் நடைபெறுவது ஆபத்தை விலைக்கு வாங்குவதாக அமையும். பாதிக்கப்பட்ட காச நோயாளி, தன்னுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கும் ஐந்து முதல் 15 பேருக்கு அந்த நோய்த்தொற்றை பரப்பக்கூடும். முழுமையாக மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் போனால், மற்றவர்களுக்கு நோய்த்தொற்றை வழங்குவதுடன், மருந்துக்குக் கட்டுப்படாத நோய்த் தீவிரத்தையும் எதிர்கொள்வார்கள். அதனால், நிலைக் குழுவின் பரிந்துரையை அரசு புறந்தள்ளக் கூடாது.

EVA STALIN IAS ACADEMY

# உறுப்புகளை தானம் செய்தவரின் உடலுக்கு அரசு மரியாதை

**உத்தமபாளையம், செப். 26:** சின்னமனூரில் விபத்தில் மூளைச் சாவு அடைந்து, உடல் உறுப்புகளை தானம் செய்த அரசு ஊழியரின் உடலுக்கு தமிழக அரசு சார்பில் மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செவ்வாய்க்கிழமை மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

தேனி மாவட்டம், சின்னமனூர் காந்திநகர் குடியிருப்பைச் சேர்ந்த தனசேகரன் மகன் வடிவேல் (43). தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய் முதுநிலை ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்தார். கடந்த சனிக்கிழமை பணி முடிந்து இரு சக்கர வாகனத்தில் இவர் வீட்டுக்கு திரும்பி வந்து கொண்டிருந்தபோது, தேசிய நெடுஞ்சாலையில் சப்பாணியம்மன் கோயில் அருகில் மாடு மோதியது.

இதில் கீழே விழுந்து பலத்த காயமடைந்த அவர், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர், தீவிர சிகிச்சைக்காக மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சையில் இருந்த வடிவேல், ஞாயிற்றுக்கிழமை மூளைச் சாவு அடைந்தார். அவரது மனைவி, குடும்பத்தினர் அவரது உடல் உறுப்புகளைத்தானமாகக்கொடுப்பதாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்குத் தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, அவரது சிறுநீரகம், கல்லீரல், கண் கருவிழி, தோல் போன்ற உடல் உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டன.

## தமிழகத்தில் முதல் முறை



சின்னமனூரில் உடல் உறுப்புகளைத் தானமாக வழங்கிய அரசு ஊழியர் வடிவேலின் உடலுக்கு தமிழக அரசு சார்பில் செவ்வாய்க்கிழமை மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்திய மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். (உள்படம்) வடிவேல்.

**அரசு மரியாதை:** இறப்பதற்கு முன்பாக உடல் உறுப்புகளைத் தானமாக அளிப்பவர்களின் தியாகத்தை மதிக்கும் வகையில், அவர்களது உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என கடந்த சனிக்கிழமை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இந்த அறிவிப்புக்குப் பிறகு, முதல் முறையாக உடல் உறுப்புகளைத் தானம் செய்த வடிவேலுவின் உடலுக்கு தமிழக அரசு சார்பில், மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், தேனி மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பிரவீன் உமேஷ் டோங்கரே, சட்டப்பேரவை உறுப்பினர்கள் ராமகிருஷ்ணன், மகாராஜன், சரவணக்குமார் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். இதையடுத்து, அவரது உடலை குடும்பத்தினர் எடுத்துச் சென்று சின்னமனூர் மின் மயானத்தில் தகனம் செய்தனர்.

# அயோத்தி கோயிலில் ஜன.22–இல் மூலவர் பிரதிஷ்டை

**புது தில்லி, செப். 26:** அயோத்தி ராமர் கோயிலின் தரைத்தள கட்டுமானப் பணிகள் டிசம்பர் மாத இறுதிக்குள் முழுவதுமாக நிறைவடையும் நிலையில், மூலவரான குழந்தை ராமரின் சிலை வரும் ஜனவரி 22-ஆம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட வாய்ப்புள்ளதாக கோயில் கட்டுமானக் குழுத் தலைவர் நிருபேந்திர மிஸ்ரா தெரிவித்தார்.

ராமஜென்மபூமி வழக்கில் உச்சநீதிமன்றம் கடந்த 2019-ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பையடுத்து அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது.

கடந்த 2020-ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்ற பூமி பூஜையைத் தொடர்ந்து ராமர் கோயில் கட்டும் பணி தொடங்கியது. 2.27 ஏக்கர் பரப்பளவில் 3 அடுக்கில் உருவாகி வரும் ராமர் கோயிலின் கட்டுமானப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

கருவறையில் மூலவர் குழந்தை ராமர் (ராம் லல்லா) சிலையைச் செய்வதற்குத் தேவையான இரு அரியவகை கற்கள் நேபாளத்தில் இருந்து அயோத்திக்கு கொண்டு வரப்பட்டு, செதுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயில் தரைத்தளத்தின் கட்டுமானப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டும் சூழலில், மூலவர் சிலை பிரதிஷ்டை தொடர்பாக கட்டுமானக் குழுத் தலைவர் மிஸ்ரா தகவல் தெரிவித்துள்ளார்.

**ஜன. 22-இல் சிலை பிரதிஷ்டை:** பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், 'கோயில் கருவறையில் மூலவரான குழந்தை ராமரின் சிலை வரும் ஜனவரி 22-ஆம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. அடுத்த ஆண்டு மகர சங்கராந்தி திருநாளான ஜனவரி 14-ஆம் தேதி முதல் பிரதிஷ்டை தொடர்பான நடைமுறை தொடங்கப்படும். 10 நாள்களுக்கு பிரதிஷ்டை சடங்குகளைப் பின்பற்றத் திட்டமிட்டுள்ளோம்.

சிலை பிரதிஷ்டை நடைபெறும் நாளில் பெருமளவு மக்கள் கூட்டம் எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து தொலைக்காட்சி ஒளிபரப்பு மூலம் நிகழ்வைப் பார்க்குமாறு அறக்கட்டளை வலியுறுத்துகிறது.

இந்த விழாவுக்கு அழைப்பு விடுக்க துறவிகள், ஞானிகள், ராமர் கோயில் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என 10,000 பேர் கொண்ட முதல்கட்ட பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

மூலவர் ஸ்ரீ ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்படும் நிகழ்ச்சியில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு அறக்கட்டளை நிர்வாகிகள் அழைப்பு விடுக்கவுள்ளனர்.

**பக்தர்களுக்கு ஜன.24 முதல் தரிசனம்**



அயோத்தியில் நடைபெற்றுவரும் ராமர் கோயில் கட்டுமானப் பணி.

பாலராமர் சிலை பிரதிஷ்டை முடிந்து ஜன. 24-ஆம் தேதி முதல் பக்தர்களின் தரிசனத்துக்காக ராமர் கோயில் திறக்கப்படும்.

**கட்டுமான சிறப்பம்சங்கள்:** கோயிலில் கட்டுமானப் பரப்பளவு 2.5 ஏக்கர். மாட வீதிகளையும் சேர்த்தால் வளாகத்தின் மொத்த பரப்பளவு சுமார் 8 ஏக்கர் ஆகும். கோயில் கட்டுமானத்தில் இரும்பு பயன்படுத்தப்படவில்லை. அதேபோல், கல் தொகுதிகளை இணைக்க தாமிரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீராமரின் வாழ்க்கை மற்றும் அவர் நிறைவேற்றிய கடமைகளைச் சித்தரிக்கும் 90 வெண்கலத் தகடுகள் கோயில் வளாகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

கோயிலின் கட்டுமானப் பணிகளுக்கு இதுவரை சுமார் ரூ.900 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த கட்டுமானப் பணிக்கு சுமார் ரூ.1,700 கோடி முதல் ரூ.1,800 கோடி வரை செலவிடப்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் ராம நவமி திருநாளன்று கோயில் கருவறையில் சூரிய ஒளிபடும் வகையில் கோயில் உச்சியில் நிறுவப்படும் அமைப்பை வடிவமைக்கும் பணி பெங்களூரில் நடைபெற்று வருகிறது.

ராம ஜென்மபூமியில் இந்திய தொல்லியல் துறையின் அகழ்வாராய்ச்சி மற்றும் கோயில் கட்டுமானப் பணிகளின்போது சில தொல்பொருள்கள் கிடைத்தன. இவற்றில் சில பொருள்கள் அறக்கட்டளையின் பாதுகாப்பில் பாதுகாப்பாக உள்ளன. தொல்லியல் துறையின் அனுமதி பெற்ற பிறகு, அருங்காட்சியகத்தில் அந்தப் பொருள்களைக் காட்சிப்படுத்துவோம்' என்றார்.

**அரசியல் ஆதாயமில்லை:** மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக ராமர் கோயில் திறக்கப்படுவதில் அரசியல் ஆதாயமிருப்பதாக கூறப்படுவதை நிராகரித்த மிஸ்ரா, 'கோயில் தரைத்தளத்தின் கட்டுமானப் பணிளை டிசம்பர் மாத இறுதிக்குள் முடிப்பது ஏற்கெனவே திட்டமிடப்பட்டது. அவ்வாறு குறிப்பிட்ட அவகாசத்தில் பணிகள் நிறைவடைகிறது. கட்டமைப்பு 1,000 ஆண்டுகளுக்கும் மேலாக நிலைத்து நிற்க வேண்டும் என்ற லட்சியத்துடன் ராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது' என்றார்.

# குதிரையேற்றத்தில் இந்தியாவுக்கு வரலாற்றுத் தங்கம்

**ஹாங்ஜௌ, செப். 26: சீனாவில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவுக்கு குதிரையேற்றத்தில் வரலாற்றுத் தங்கமும், செயிலிங்கில் 1 வெள்ளி, 1 வெண்கலமும் செவ்வாய்க்கிழமை கிடைத்தன. இதையடுத்து பதக்க எண்ணிக்கையை 14–ஆக அதிகரித்துக் கொண்டது இந்தியா.**







## 41 ஆண்டுகளுக்குப் பிறகு தங்கம்

ஈக்வெஸ்ட்ரியன் எனப்படும் குதிரையேற்ற விளையாட்டில், டிரெஸ்ஸேஜ் அணிகள் பிரிவில் இந்தியாவின் சுதீப்தி ஹஜிலா, திவ்யகிருத்தி சிங், விபுல் ஹிருதய் சேதா, அனுஷ் அகர்வல்லா ஆகியோர் அடங்கிய அணி 209.205 சதவீத புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கத்தைக் கைப்பற்றியது. சீனா, ஹாங்காங் அணிகள் முறையே அடுத்த இரு பதக்கங்களைப் பெற்றன.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் குதிரையேற்றத்தில் இதற்கு முன் கடந்த 1982 எடிஷனில் இந்தியாவுக்கு 3 தங்கப் பதக்கங்கள் கிடைத்தன.

தனிநபர் ஈவன்டிங் பிரிவில் ரகுவீர் சிங், அணிகள் ஈவன்டிங் பிரிவில் ரகுவீர் சிங், குலாம் முகமது கான், விஷால் சிங், மில்கா சிங் கூட்டணி, தனிநபர் டென்ட் பெக்கிங் பிரிவில் ரூபிந்தர் சிங் பிரார் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றிருந்தனர்.

அதன் பிறகு 1986 எடிஷனில் இதே டிரெஸ்ஸேஜ் பிரிவில் இந்தியாவுக்கு வெண்கலம் கிடைத்ததே கடைசியாக இருந்தது.

## நேஹாவுக்கு வெள்ளி, எபாதத்துக்கு வெண்கலம்

செயிலிங் எனப்படும் பாய்மரப்படகுப் போட்டியில் மகளிருக்கான டிஞ்ஜி ஐஎல்சிஏ-4 பிரிவில் நேஹா தாக்குர் 2-ஆம் இடம் பிடித்து வெள்ளி பெற்றார். தாய்லாந்தின் நோபாசோன் குன்பூன்ஜன் தங்கமும், சிங்கப்பூரின் கியாரா மேரி வெண்கலமும் வென்றனர். ஆடவர் விண்ட்சர்ஃபர் ஆர்எஸ்: எக்ஸ் பிரிவில் எபாதத் அலி மொத்தமாக 52 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்து வெண்கலப் பதக்கம் வென்றார். தென் கொரியாவின் வோன்வூ சோ தங்கமும், தாய்லாந்தின் நத்தபோங் போனோபராட் வெள்ளியும் பெற்றனர்.

# 37 மாவட்டங்களில் ரூ.150 கோடியில் 1,000 வகுப்பறைகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்

**சென்னை, செப். 26:** தமிழகத்தில் 37 மாவட்டங்களில்ரூ.150கோடியில் கட்டப்பட்ட ஆயிரம் புதிய வகுப்பறைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், காணொலிக் காட்சி வாயிலாக இந்தப் புதிய கட்டமைப்புகளை அவர் தொடங்கி வைத்தார்.

ஊராட்சி ஒன்றியத் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு சுமார் ரூ.800 கோடியில் 6 ஆயிரம் புதிய வகுப்பறைகள் கட்டப்படும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இந்தத் திட்டம், குழந்தை நேய பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் ஊரகப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. வேலூர் மாவட்டம் காட்பாடியில் கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற அரசு விழாவில், குழந்தை நேய பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிய வகுப்பறைகள் கட்டும் பணிக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

அதன் தொடர்ச்சியாக, கடந்த 8 மாதங்களில் ரூ.150 கோடி செலவில் தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் ஆயிரம் புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள இந்த வகுப்பறைகளை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடங்கள் அனைத்தும் உயர்த்தப்பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள் போன்றவற்றை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ளன. இந்த வகுப்பறைகளை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**எளிமைப்படுத்தப்பட்ட கணக்குகள்:** ஊராட்சிகள் பராமரிக்கும் கணக்குப் பணிகளை எளிமையாக்கும் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் 11 வகையான கணக்குகளை பராமரித்து வருவது கடினமான செயலாக உள்ளது. அதனை எளிமைப்படுத்தும் விதமாக ஊராட்சிகள் இனி மூன்று கணக்குகளை மட்டுமே பராமரிக்கும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக இந்தியன் வங்கியுடன் இணைந்து தனி இணையதளம் (tndrdpri.indianbank.in) உருவாக்கப்பட்டுள்ளது. இந்தஇணையதளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதன் மூலம், கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சிகளின் கணக்கு விவரங்களை அறிய வங்கி அலுவலரைச் சார்ந்து இருப்பது குறையும். ஊராட்சிக்குத் தேவையான பணிகள் நிதி இருப்புக்கு ஏற்ப உடனடியாக மேற்கொள்ளவும், நிதிப் பரிவர்த்தனைகளை உடனுக்குடன் அறியவும் முடியும் என்று தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில், அமைச்சர் இ.பெரியசாமி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் பி.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா, இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் எம்.கே.பஜாஜ், மாநில தகவலியல் அலுவலர் சி.ஜே.அந்தோணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



தமிழகத்தில் 37 மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் ரூ.150 கோடியில் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி மூலம் செவ்வாய்க்கிழமை திறந்துவைத்த முதல்வர் மு.க ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் இ.பெரியசாமி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர்.

EVA STALIN IAS ACADEMY